# Avinashilingam Institute for Home Science and Higher Education for Women

## Coimbatore – 641 043.

## Bachelor's Degree Examination – April 2019

## Semester II

**Class : U.G.** | **Time : 3 Hours**

**Major : All Majors** | **Max.Marks : 100**

### 18BLT002 இலக்கியம், இலக்கணம், இலக்கிய வரலாறு – II

**I. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையை வட்டமிடுக** **10x1 = 10**

1. சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர் யார்?

   அ. கபிலர் ஆ. நத்தத்தனார் இ. பேயனார் ஈ நம்பூதனார்

2. யாழ்ப்பாணர் பற்றிய செய்தியை கூறும் நூல் எது?

   அ. பொருநராற்றுப்படை ஆ. 'கூத்தராற்றுப்படை'

   இ. சிறுபாணாற்றுப்படை ஈ மதுரைக்காஞ்சி

3. இலைகள் தீய்ந்த மரத்தடியில் தங்கி வாழ்ந்தவர் யார்?

   அ. கூத்தர் ஆ. புலவர் இ. விறலியர் ஈ பொருநர்

4. "புளிற்று நாய் குரைக்கும் புலலென அட்டில்" எப்பொருளை உணர்த்தும் வரிகள்?

   அ. கொடை ஆ. அச்சம் இ. மருட்கை ஈ. வறுமை

5. பத்துப்பாட்டில் அடிவரையறை அதிகம் உள்ள நூல் எது?

   அ. பட்டினப்பாலை ஆ. குறிஞ்சிப்பாட்டு இ. மதுரைக்காஞ்சி ஈ. நெடுநல்வாட

6. இனியவை நாற்பதின் ஆசிரியர் யார்?

   அ. பூதஞ்சேந்தனார் ஆ. கபிலர் இ. நத்தத்தனார் ஈ. பரணர்

7. வேற்றுமை உருபுகள் எத்தனை?

   அ. எட்டு ஆ. ஆறு இ. பத்து ஈ. ஐந்து

8. எது அழிந்தபின் வாழாமை முன்னினிது?

   அ. பொருள் ஆ. இல்லாள் இ. மானம் ஈ. குழந்தை

9. கபிலர் இயற்றிய நூல் எது?

   அ. இன்னாநாற்பது ஆ. இனியவை நாற்பது இ. கார் நாற்பது ஈ. களவழி நாற்

10. தமிழ் விடுதூது எவ்வகையான இலக்கியம்?

    அ. காப்பியம் ஆ. நீதி இலக்கியம் இ. சங்க இலக்கியம் ஈ. சிற்றிலக்கிய

## பகுதி ஆ (5x6 = 30)

**II. பின்வரும் வினாக்களுக்கு 200 சொற்களில் விடை தருக.**

11. அ. ஆற்றுப்படையின் இலக்கணம் கூறி கூத்தரின் பணிகளை எழுதுக.

அல்லது

11. ஆ. சிறுபாணாற்றுப்படையில் விறலியர் வாழ்விடம் தொழில் குறித்து விவரிக்க

12. அ. இனியவை நாற்பது எடுத்துரைக்கும் பண்புகளை எழுதுக.

அல்லது

12. ஆ. இன்னா நாற்பது எடுத்துரைக்கும் வாழ்வியல் கூறுகள் பற்றி விளக்குக.

13. அ. சொற்களின் வகைகள் எவை? அவற்றைச் சான்றுகளுடன் விளக்குக.

அல்லது

13. ஆ. வல்லினமிகும். மிகா இடங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

14. அ. மதுரை சொக்கநாதரின் பெருமைகளைத் தமிழ்விடுதூது வழி நின்று விளக்குக.

அல்லது

14. ஆ. விருந்தோம்பல் சிறப்பினைச் சிறுபாணாற்றுப்படை வழிநின்று விளக்குக.

15. அ. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக மாற்றுக. வேண்டும். நெகிழி. உடனே சட்டம். இயற்றி கொண்டு சிறப்பாகும் என்று வர, ஒழிப்பு

அல்லது

15. ஆ. பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக. தாலுக்கா ஆபீஸ், காலேஜ், பஜார், ஜில்லா. கோர்ட், பஸ் ஸ்டாண்டு, மாமூல், ஜென்ரல் சர்க்கார், மார்க்கெட், ஸ்கூல் மீட்டிங்.

## பகுதி இ (5x12 = 60)

**III. பின்வரும் வினாக்களுக்கு நான்கு பக்க அளவில் விடை தருக**

16. அ. நல்லியக்கோடனின் குணநலன்களைக் விவரிக்க.

அல்லது

16. ஆ. சிறுபாணாற்றுப்படை குறிப்பிடும் இயற்கை வளத்தினை எடுத்தெழுதுக.

17. அ. இனியவை நாற்பது எடுத்துரைக்கும் வாழ்வியல் நெறிகளைத் தொகுத்தெழுதுக.

அல்லது

17. ஆ. இன்னா நாற்பது வழி கபிலர் குறிப்பிடும் பண்புகளை விவரிக்க.

18. அ. கடையெழு வள்ளல்களின் தனித்தன்மையை சிறுபாணாற்றுப்படை வழி தொகுத்துரைக்க.

அல்லது

18. ஆ. தமிழ்விடு தூதின் வழி தமிழின் பெருமைகளைத் தொகுத்துரைக்க.

19. அ. நீதி இலக்கியங்கள் எடுத்துரைக்கும் வாழ்வியல் அறங்களை விவரிக்க.

அல்லது

19. ஆ. தொகை நிலைத் தொடரின் வகைகளைச் சான்றுடன் விவரிக்க.

20. அ. பத்துப்பாட்டு குறித்து இலக்கிய வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

20. ஆ. சிற்றிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

*****